செய்தி வெளியீடு எண்:395 நாள்:12.08.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்த மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம், இன்று (12.08.2015) சென்னை, சேப்பாக்கம் எழிலகத்தில் மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பு துறையிடமிருந்து, தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் அடிப்படையில், தமிழ்நாட்டில் குடிமக்களின் விவரங்கள் அடங்கிய ஆதார் எண் உள்ளிட்ட கணினி தரவு தொகுப்பு பெறப்பட வேண்டியுள்ளது. தற்போது தேசிய மக்கள் தொகை பதிவேட்டிற்கென உடற்கூறு கணினி பதிவு செய்யும் பணி 83 சதவிகிதம் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. பொது விநியோகத்திட்ட சேவைகளை முழு கணினி மயமாக்க, அதற்கென தயாரிக்கப்பட்டுள்ள சிறப்பு மென்பொருள், திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனம் (System Integrator) மூலமாக, முதற்கட்டமாக சென்னை மாநகரிலும், திருச்சி மாவட்டத்திலும் 39 நியாய விலைக்கடைகளில் பரிசோதிக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 4 மாதத்திற்கு போதுமான புழுங்கல் மற்றும் பச்சரிசி கையிருப்பில் உள்ளதாகவும், சர்க்கரை, கோதுமை, பருப்பு வகைகள், பாமாயில் முதலான மானிய விலை பொருட்கள் அந்தந்த மாதத்தின் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டு, அங்காடிகளுக்கு

நகர்வு செய்யப்பட்டு வருகின்றன என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கு, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக மாதந்தோறும் 2ஆம் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், ஆகஸ்ட் 2015 வரையில், 3 இலட்சத்து 95 ஆயிரத்து 769 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 3 இலட்சத்து 78 ஆயிரத்து 420 மனுக்கள் அன்றைய தினத்திலேயே தீர்வு செய்யப்பட்டும், மீதமுள்ள மனுக்கள் பின்னரும் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட வழங்கல் அலுவலர்கள் நியாய விலை அங்காடிகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்கள், ஒதுக்கீட்டு ஆணையின்படி பெறப்பட்டுள்ளனவா என்றும், சீரான முறையில் விநியோகம் நடைபெறுவது, போதுமான, தரமான பொருட்கள் கையிருப்பில் உள்ளனவா என்பதையும் உறுதி செய்து வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைகள் கோரி மனு செய்யும் அனைத்து தரப்பு மக்களுக்கும் அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்ற **மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி,** இதுவரை மொத்தம் **12 இலட்சத்து 92 ஆயிரத்து 970 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.** இன்று வரை, 4 இலட்சத்து 12 ஆயிரத்து 978 போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டைகள் கோரி பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து 60 நாட்களுக்குள் அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்றும், அச்சடித்து பெறப்பட்ட குடும்ப அட்டைகளை பெற்றுச்செல்லுமாறு மனுதாரர்களுக்கு

தகவல் தெரிவிக்குமாறும் அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி, கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் 25,501 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுள் 732 பேர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் (BM Act) சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணவு துறை, வருவாய்த்துறை, குற்றப்புலனாய்வு காவல் துறை அலுவலர்கள் கூட்டு நடவடிக்கைகள் மூலம் கடத்தல் தடுப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர் திரு.சிவ்தாஸ்மீனா, இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு. சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**Principal Secretary**
**Co-op.,Food and CP.**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**